செ.வெ.எண்.31 நாள்:18.11.2020

**நீலகிரி மாவட்டத்தில் கல்லாறு மற்றும் கக்கநல்லா சோதனைச் சாவடிகளில் நுழையும் வெளி மாநில மற்றும் வெளி மாவட்ட அனைத்து வாகனங்களுக்கு புதியதாக நிர்ணயம் செய்யப்படும் பசுமை வரி 01.12.2020 அன்று முதல் அமுலுக்கு வரும்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு**

---

நீலகிரி மாவட்டத்தில் கல்லாறு மற்றும் கக்கநல்லா சோதனைச் சாவடிகளில் நுழையும் வெளி மாநில மற்றும் வெளி மாவட்ட அனைத்து வாகனங்களுக்கு ஒரே இனமாக ரூ. 30/- பசுமை வரி வசூல் செய்யப்பட்டு வந்தது தற்போது இவ்வரியினை முறைப்படுத்தும் விதமாக மேற்கண்ட சோதனைச் சாவடிகளில் நுழையும் வெளி மாநில மற்றும் வெளி மாவட்ட வாகனங்களுக்கு ஏற்றவாறு பசுமை வரி கீழ்க்கண்டவாறு வசூல் செய்யப்படும்.

| வ.எண் | வாகன விபரம் | நிர்ணயிக்கப்படும் பசுமை வரி (ரூ) |
|---|---|---|
| 1 | Bus | 100 |
| 2. | Lorry ( Tipper) | 100 |
| 3. | Maxi Cabs | 70 |
| 4. | Tourist Taxi / Light motor vehicle | 70 |
| 5. | Car/Jeep | 30 |
| 6. | Three Wheeler | 15 |
| 7. | Two Wheeler | 10 |

எனவே, மேற்கண்டவாறு வாகனங்களுக்கு புதியதாக நிர்ணயம் செய்யப்படும் பசுமை வரி 01.12.2020 அன்று முதல் அமுலுக்கு வரும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட திவ்யா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.